JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39/2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Boopathi | Caste | |
| Father's Name | Ammasai | Calling | |
| Village | Kamraj nagar, Vellangovil | Religion | |
| Taluk | Gobi | Age | |

(**Accused Present**.)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.09.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு பெருந்துறை இன்ப்ரா டெக்ஸ் கம்பெனியில் டெய்லராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.01.2019 ம் தேதி இரவு 8 மணி அளவில் வெள்ளாங்கோவில் இருந்து பழனிக்கு பாதயாத்திரையாக நானும், எனது அக்கா நந்தினி, சித்தப்பா வீராச்சாமி, என் தந்தை அம்மாசை மற்றும் எங்கள் ஊரை சேர்ந்தவர்களும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது திங்களூர் அம்மன் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகில் சென்று கொண்டிருந்தபோது தனபால் என்பவர் அவருக்கு சொந்தமான பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிள் TN 56 F 0852 என்ற பதிவு எண் கொண்ட வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் அப்பா அம்மாசை மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

2)அதனால் என் அப்பா கீழே விழுந்ததில் என் அப்பாவின் தலையில்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

பின்புறமாக பலத்த ரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. வலது கால் பாதத்தில் ரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. நானும், என்னுடைய சித்தப்பா மற்றும் என் அக்கா ஆகியோர் என் அப்பாவை வேன் மூலம் பெருந்துறை KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். மேற்படி மருத்துமவனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று கொண்டு பின்னர் ஈரோடு KMCH மருத்துவமனைக்கு மருத்துவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அழைத்து சென்றோம்.

3)அதன்பின்னர் நான் இரவு 11 மணி அளவில் திங்களூர் காவல் நிலையம் வந்து விபத்து ஏற்படுத்திய தனபால் மீது நடவடிக்கு எடுக்குமாறு கேட்டு கொண்டு புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஆஜரில் உள்ள எதிரி தனபால்தான் என் அப்பாவின் மீது அவரது இருசக்கர வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்திய நபராவார்.

4)அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக என் அப்பாவை ஈரோடு அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்க்குமாறு மருத்துவர்கள் கேட்டுகொண்டதால் 12.30 மணி இருக்கும். அந்த சமயத்தில் அந்த மருத்துவமனையில் இருந்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒரு மணி அளவில் என் அப்பாவை பரிசோதித்து பார்த்த மருத்துவர்கள் இறந்துபோய்விட்டதாக ஈரோடு அரசு மருத்துவமனையில் கூறினார்கள்.

5)அதன்பின்னர் காலை 7 மணி அளவில் சம்பவம் நடந்த இடத்தை நான் திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களுக்கு

அடையாளம் காண்பித்தேன். காலை 9.45 மணி அளவில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு திங்களூர் உதவி ஆய்வாளர் அவர்கள் என் அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார். என் அப்பாவின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டினேன். திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். என்னுடையதுதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள காலம் எண்.14 ல் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம் என்னுடையதுதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. போலிசார் கேட்டு கொண்டதற்கிணங்க முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2)புகாரில் நான் புகார் கொடுத்த தேதி குறிப்பிட்டு போடவில்லை என்றால் சரிதான். புகாரில் எந்த இடத்திலும் இன்று 11.01.2019 என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். புகாரை எத்தனை மணிக்கு எழுதினேன் என்றால் இரவு 11 அல்லது 11.30 மணி இருக்கும். எவ்வளவு நேரம் புகாரை எழுதினேன் என்றால் அரை மணி நேரத்தில் எழுதிவிட்டேன். புகாரை யார் சொல்ல சொல்ல எழுதினேன் என்றால் நனாகதான் எழுதினேன்.

3)நான் வேலை செய்யும் பெருந்துறை இன்ப்ரா டெக்ஸ் கம்பெனியில்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

இரவு நேர பணியும் உண்டு என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது யார் யார் இருந்தோம் என்றால் நானும், வீராச்சாமி, வடிவேல் ஆகியோர்கள் இருந்தோம். நான் புகார் கொடுக்கும்போது சிவகாமி, சுகண்யா, ராமன், வடிவேல், வீராச்சாமி ஆகியோர்களின் பெயர், முகவரியை கேட்டு எழுதிகொண்டார்கள் என்றால் ஆமாம். அதற்கு பக்கத்தில் விபரங்கள் எல்லாம் சரியென பார்த்து கொண்டு கையொப்பம் இடுமாறு கேட்டு வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான்.

4)நான் 12ம் தேதி எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் காலை சுமார் 7 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். அங்கு எத்தனை மணி வரை இருந்தேன் என்றால் 8.30 மணி வரை இருந்தேன். அதற்குபிறகு என்னுடன் ஒரு தலைமை காவலரை நியமித்து ஈரோடு அனுப்பினார்கள் என்றால் சரிதான். தலைமை காவலர்தான் ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து குமரேசன், லோகநாதன், விஜயகிருஷ்ணன், இளங்கோ, திருமூர்த்தி ஆகியோர்களிடம் தலைமை காவலர் கையொப்பம் வாங்கினார் என்றால் ஆமாம். அங்கு தலைமை காவலர் மட்டும்தான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தார் என்றால் ஆமாம்.

5)விபத்து நடந்து எவ்வளவு நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் விபத்து நடந்தவுடன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். எப்போது சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுப்பதற்கு முன்பே போலிசார் சம்பவ இடத்தை பார்த்ததாக என்னிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். நான் முதல் முதலில் எந்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றால் பெருநச்துறை KMC மருத்துவமனையில் சேர்த்தேன். அந்த மருத்துவமனையில் இருந்து போலிசாருக்கு தகவல் சொல்லி போலிசார்

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

பெருந்துறை KMC மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள் என்றால் ஆமாம். அப்போதே எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று என்னை விசாரித்து எழுதிகொண்டார்களா என்றால் விசாரித்தார்கள். எழுதிகொள்ளவில்லை. என்னை பார்த்துவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றார்கள்.

6)பெருந்துறை KMC மருத்துவமனையில் விபத்து பதிவேடு ஆவணங்களை போலிசார் வாங்கி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈரோடு KMCH மருத்துவமனைக்கு போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. ஈரோடு KMCH மருத்துவமனையில் என் அப்பாவை அரசு மருத்துவமனையில் அழைதது செல்ல சொன்னதால் அழைத்து சென்றோம் என்றால் ஆமாம். நான் ஈரோடு KMCH மருத்துவமனையில் எனது அப்பைாவை சேர்க்கும்போது என்ன மணி இருக்கும் என்றால் இரவு 9.45 மணி இருக்கும். அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு மாற்றும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 12.30 மணி இருக்கும்.

7)மேற்படி KMCH மருத்துவமனையில் எவ்வளவு மணி நேரம் இருந்தோம் என்றால் ஒன்றரை மணி நேரம் இருந்தோம். நான்தான் ஈரோடு KMCH மருத்துமவனையில் செலுத்தவேண்டிய கட்டணத்தை செலுத்தி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தேன் என்றால் சரிதான். இந்த விபத்து நடந்தது மார்கழி மாதம் என்றால் சரிதான். தமிழ் தேதி என்னவென்றால் தை 1 ம் தேதிக்கு மூன்று நாட்கள் முன்னால் நடந்தது. நான் என்னுடைய புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ நானும், எனது அப்பா, வீராச்சாமி சென்றோம் என்ற விபரத்தை தவிர எங்கள் ஊரை சேர்ந்தவர்களும் வந்தார்கள என்று சொல்லவில்லை என்றால சரிதான்.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

8)புகாரில் பழனி பாதயாத்திரைக்கு எத்தணை பேர் போனோம் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த உடனே யார் போன் செய்து வரச்சொன்னார்கள் என்றால் நான் விபத்து நடக்கும்போது உடன் இருந்தேன். விபத்து நடந்தது எத்தனை மணி என்றால் இரவு 8 மணி இருக்கும். இருட்டான நேரம் என்றால் ஆமாம். நான் நடந்து போன இடத்தில் தெருவிளக்கு வெளிச்சம் இல்லை என்றால் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகே வெளிச்சம் இருந்தது.

9)நான் சொன்னதுபோல் சம்பவம் நடந்த இடத்தில் வெளிச்சம் இல்லை என்றால் சரியல்ல. முன்னால் பார்த்து தான் நடந்து சென்றேன் என்றும், பின்னால் என்ன நடந்தது என்று நான் பார்ததிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பைக் மோதி அம்மாசை கீழே கிடந்ததை பார்த்தேன் என்றால் ஆமாம். நான் அம்மாசைக்கு முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். நான் போய் கொண்டிருந்த இடம் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனிக்கு 500 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இல்லை. பக்கத்தில்தான் போய் கொண்டிருந்தேன்.

10)என் அப்பா எனக்கு பின்னால் எவ்வளவு தூரத்தில் வந்து கொண்டிருந்தார் என்றால் சுமார் 150 அடி முதல் 200 அடி இருக்கும். நடந்து போகவேண்டும் என்றால் மண் ரோட்டில் தான் நடந்து செல்லவேண்டும் என்றால் சரிதான். தார் ரோட்டில் நடந்து சென்றால் தவறு என்றால் சரிதான். அந்த இடத்தில் சுமார் ஒரு பத்து அடி அகலத்திற்கு மண் தடம் உள்ளது என்றால் இல்லை. ஜல்லி போட்டு ரோடு வேலை நடந்து கொண்டிருந்தது. ரோடு வேலை நடந்து கொண்டிருந்ததால் அங்கங்கே தடுப்பு வைக்கப்பட்டிருந்தது என்றால் இல்லை. தார் ரோட்டில் வெள்ளை கோட்டிற்கு பக்கத்தில் நடந்து கொண்டு சென்றார்.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

11)என் அப்பா திடீரென தார் ரோட்டை கடந்துதான் இந்த விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நான் பாதயாத்திரை சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணமே எனது தகப்பனார் தான் என்றால் சரியல்ல. திடீரென எனது தந்தை சாலையை கடந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை சுற்றிலும், வீடுகள், தறி பட்டறைகள், ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி, கோயில்கள் உள்ளது என்றால் சரிதான். அங்கு பொதுமக்கள் நடமாட்டமும் இருந்தது என்றால் சரிதான்.

12)விபத்து நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நஷ்ட ஈடு தொகையை வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். சாட்சிகள் நந்தினி, சிவகாமி, சுகண்யா, ராமன், வடிவேல், வீராச்சாமி ஆகிய அனைவரும் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். நான் நஷ்ட ஈடு வாங்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் எனது தந்தை தான் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நேரடியாக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி நந்தினி திருமணம் ஆகி எந்த ஊரில் உள்ளார் என்றால் உள்ளூரில்தான் இருந்து வருகிறார்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39/2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Nandhini | Caste | |
| Father's Name | W/o.Arumugam | Calling | |
| Village | Kamraj nagar, Vellangovil | Religion | |
| Taluk | Gobi | Age | |

(**Accused Present**.)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.09.2023

**<u>முதல் விசாரணை</u>**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 11.01.2019 ம் தேதி இரவு 8 மணி அளவில் வெள்ளாங்கோவிலில் இருந்து பழனிக்கு பாதயாத்திரையாக நானும், என் தம்பி பூபதியும், சித்தப்பா வீராச்சாமி, என் தந்தை அம்மாசை மற்றும் எங்கள் ஊரை சேர்ந்தவர்களும் நடந்து சென்றுகொண்டிருந்தபோது திங்களூர் அம்மன் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகில் சென்று கொண்டிருந்தபோது ஆஜரில் உள்ள எதிரி தனபால் என்பவர் அவருக்கு சொந்தமான பஜாஜ் டிஸ்கவர் வண்டியை கவனக்குறைவாக ஓட்டி வந்து என் அப்பா அம்மாசை மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

2)அதனால் என் அப்பா கீழே விழுந்ததில் என் அப்பாவின் தலையில் பின்புறமாக பலத்த ரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. வலது கால் பாதத்தில் ரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. நானும், என்னுடைய சித்தப்பா மற்றும் என் தம்பி

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை(FAC).

அசா1ம் என் அப்பாவை வேன் மூலம் பெருந்துறை KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம். மேற்படி மருத்துமவனையில் முதல் உதவி சிகிச்சை பெற்று கொண்டு பின்னர் ஈரோடு KMCH மருத்துவமனைக்கு மருத்துவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அழைத்து சென்றோம்.

3)அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக என் அப்பாவை ஈரோடு அரசு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்க்குமாறு மருத்துவர்கள் கேட்டுகொண்டதால் 12.30 மணி இருக்கும். அந்த சமயத்தில் அந்த மருத்துவமனையில் இருந்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒரு மணி அளவில் என் அப்பாவை பரிசோதித்து பார்த்த மருத்துவர்கள் இறந்துபோய்விட்டதாக ஈரோடு அரசு மருத்துவமனையில் கூறினார்கள்.

4)காலை 9.45 மணி அளவில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு திங்களூர் உதவி ஆய்வாளர் அவர்கள் என் அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார். என் அப்பாவின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டினேன். திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)போலிசார் முதல் முதலில் எந்த மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் பெருந்துறை மருத்துமவனைக்கு வந்தார்கள். போலிசார் அங்கு விசாரித்து எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். அங்கு எனது தம்பியிடம் புகாரை எழுதி கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு போலிசார் வந்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இரவு 8 மணிக்கு வாங்கினார்கள். எனது தம்பி பூபதி எனது அப்பாவை மருத்துமவனையில் சேர்த்ததிலிருந்து போஸ்ர்ட் மார்டம் முடிந்து வீட்டிற்கு வரும் வரை எங்களுடன்தான் இருநதார் என்றால் ஆமாம். வெளியே எங்கேயும் போனாரா என்றால் இல்லை. ஈரோடு மருத்துவமனைக்கு போனபிறகு அங்கு ஒரு தலைமை

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

காவலர் தான் வந்தார் என்றால் ஆமாம்.

2)அப்போது வீராச்சாமி, ராமன் ஆகியோர்கள்தான் போலீஸ் ஸ்டேசன் வேலை பார்த்து கொண்டார்கள் என்றால் போலிசாருடன்தான் மருத்துவமனைக்கு வந்தார்கள். விபத்து நடந்த இடத்தில் இருட்டாக இருந்தது என்றால் இல்லை. வெளிச்சம் இருந்தது. அங்கு தெருவிளக்குகள் இல்லை என்றால் அதை கவனிக்கவில்லை. கம்பெனி அருகே லைட் வெளிச்சம் இருந்தது. நான் எனது சித்தப்பாவின் பின்னால் எவ்வளவு அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தேன் என்றால் அவர் முன்னால் சென்றுகொண்டிருந்தார். நான் நான்கு, ஐந்து அடி தூரத்தில் பின்னால் சென்று கொண்டிருந்தேன். நான் பாதயாத்திரைக்கு சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3)அதனால்தான் உள்ளூர்காரர்கள் யாரும் சாட்சியாக இருக்காமல் உறவினர்கள் நாங்களே சாட்சியாக உள்ளோம் என்றால் சரியல்ல. வீராச்சாமி, ராமன், நந்தினி ஆகியோர்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். நாங்கள் பாதயாத்திரை சென்றபோது ரோட்டில் அங்கங்கு சாலை வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். அம்மாசை வெள்ளை கோட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார் என்றால் சரியாக சொல்ல தெரியவில்லை. நான் விபத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39/2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | Sivakami | Caste | |
| Father's Name | W/o.Ammasai | Calling | |
| Village | Kamraj nagar, Vellangovil | Religion | |
| Taluk | Gobi | Age | |

(**Accused Present**.)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.09.2023

**<u>முதல் விசாரணை</u>**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அம்மாசை எனது கணவர் ஆவார். எனக்கு தேதி சரிவர நினைவில்லை. என் கணவர் என் மகன், மகள், மற்றும் என் மைத்துனரும் சுமார் நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பாக இரவு 8 மணி சுமாருக்கு பழனிக்கு பாதயாத்திரை செல்வதற்காக நடைபயணம் சென்றபோது திங்களூர் அருகே சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனம் என் கணவர் அம்மாசை மீது மோதியதில் என் கணவருக்கு தலையில் பின்பக்கம் பலத்த காயம் ஏற்பட்டு பெருந்துறை KMC மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக என் மகன் அசா1 பூபதி கூறியதன்பேரில் நான் மருத்துவமனைக்கு வந்து என் கணவரை பார்த்தேன்.

2)என் கணவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

அதன்பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனையில் என் கணவரை சிகிச்சைக்காக சேர்த்தோம். என் கணவர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துபோய்விட்டார். என் கணவரின் பிரேத்தின் மீது திங்களூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் என் கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார். என் கணவரின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டினேன். திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈடு தொகையை பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது மகளுக்கு திருமணம் ஆகி அவரது கணவருடன் தான் இருந்து வருகிறார்களா என்றால் ஆமாம். உள்ளூரில்தான் இருந்து வருகிறார். எனது மகள்கள் வெளியூரில் குடியிருந்து வருவதாகவும், அதனால்தான் அவர்களின் வீட்டு கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39/2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW4 | Prosecution /Defence / Court | |
| Name | Suganya | Caste | |
| Father's Name | W/o.Prabhu | Calling | |
| Village | Kamraj nagar, Vellangovil | Religion | |
| Taluk | Gobi | Age | |

(**Accused Present**.)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.09.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அம்மாசை எனது அப்பா ஆவார். 11.01.2019 ம் தேதி என் அப்பா, என் தம்பி, அக்கா, மற்றும் என் சித்தப்பா ஆகியோர்கள் இரவு 8 மணி சுமாருக்கு பழனிக்கு பாதயாத்திரை செல்வதற்காக நடைபயணம் சென்றபோது திங்களூர் அருகே அம்மன் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகே சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனம் என் அப்பா அம்மாசை மீது மோதியதில் என் அப்பாவிற்கு தலையிலும், வலது கால் பாதத்திலும் பலத்த காயம் ஏற்பட்டு பெருந்துறை KMC மருத்துவமனையில் சேர்த்து அதன்பின்னர் ஈரோடு KMCH மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக என் தம்பி அசா1 பூபதி கூறியதன்பேரில் நான் ஈரோடு KMCH மருத்துவமனைக்கு வந்து என் அப்பாவை பார்த்தேன்.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

2)என் அப்பாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. வலது கால் பாதத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. அதன்பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனையில் என் அப்பாவை சிகிச்சைக்காக சேர்த்தோம். என் அப்பா சிகிச்சை பலனளிக்காமல் இறந்துபோய்விட்டார். என் அப்பாவின் பிரேத்தின் மீது திங்களூர் உதவி ஆய்வாளர் அவர்கள் கடந்த 12.01.2019 ம் தேதி பிரேத விசாரணை மேற்கொண்டார். என் அப்பாவின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டினேன். திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈடு தொகையை பெற்றுவிட்டோம் என்றால் சரிதான். நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் வெள்ளாங்கோவில் காமராஜ் நகரில் குடியிருக்கிறேன். நான் எனது பெற்றோர் வீட்டில் இல்லை என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்றும், அனதால்தான் நான் எனது பெற்றோரின் வீட்டு கதவு எண்ணை கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 39/2020 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW5 | Prosecution /Defence / Court | |
| Name | Vadivel | Caste | |
| Father's Name | Karuppan | Calling | |
| Village | Amma nagar, Vellangovil | Religion | |
| Taluk | Gobi | Age | |

(**Accused Present**.)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 07.09.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 11.01.2019 ம் தேதி நந்தினி, வீராச்சாமி, பூபதி, அவர்களது குடும்பத்தை சேர்ந்தவர்கள் மற்றும் அந்த ஊரை சேர்ந்தவர்கள் பழனிக்கு பாதயாத்திரையாக சென்றபோது என் அண்ணன் அம்மாசைக்கு திங்களூர் அம்மன் ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக அசா1 பூபதி கூறியதின்பேரில்நான் பெருதுந்துறை KMC மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது என் அண்ணனை பார்த்தபோது என் அண்ணனுக்கு தலையின் பின்பக்கதிலும், வலது பக்க காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது.

2)அதன்பின்னர் காயம்பட்ட என் அண்ணனை ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சசைக்காக சேர்ப்பதாக அசா1 பூபதி கூறினார். அதன்பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனையில் என் அண்ணன் சிகிச்சையில் இருந்தார். ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த என் அண்ணன் அம்மாசை சிகிச்சை

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

பலனளிக்காமல் இறந்துபோய்விட்டார். 12.01.2019ம் தேதி காலை 7 மணி சுமாருக்கு திங்களூர் காவல் நிலையதிற்கு வந்து அதன்பின்னர் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது திங்களூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் வரைந்ததில் நானும், வீராச்சாமியும் பார்வை மகசரில் சாட்சி கையொப்பங்களை செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3)அதன்பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றபோது திங்களூர் உதவி ஆய்வாளர் அவர்கள் என் அண்ணனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரைண மேற்கொண்டார். என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் தெரியும். போஸ்ட் மார்டம் செய்வதற்கு போலிசாரை கூட்டி வரவேண்டி காவல் நிலையம் சென்றிருந்தேன் என்றால் சரிதான். ராமன், நான், வீராச்சாமி ஆகிய மூன்று பேரும் காவல் நிலையம் சென்றிருந்தோம் என்றால் சரிதான்.

2)அங்கு எங்ளது பெயர், முகவரியை கேட்டு போலிசார் எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு பக்கத்தில் பெயர், முகவரியை சரிபார்த்து கையெழுத்து போடச்சொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கையொப்பம் அப்போது போட்டதுதான் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).